கல்வி

மலர் 12 • இதழ் 10
நவம்பர் 2023
ஆண்டு சந்தா ரூ.600/-
விலை ₹ 50/-

நிர்வாக ஆசிரியர்
திருச்செந்தூர் முருகன்

நிறுவனர் / ஆசிரியர் /
வெளியிடுபவர்/பதிப்பாளர்
Dr. கி. முத்தையன்
94444 14694

இணை ஆசிரியர்
அக்னி வீரன்

ஆசிரியர் குழு
சாய்ராம் சேக்கிழார்
முனைவர் மா.அய்யாராசு
பேராசிரியர் பா.சரவணன்

சட்ட ஆலோசகர்
J. ரவீந்திரன்

தணிக்கையாளர்
V.T. ரஜினிகாந்த்

அச்சிடுவோர்
R. பாலஸ்

மக்கள் தொடர்பு அலுவலர்
எம்.கோதை பாலமுருகன்
94440 50865

தொடர்புக்கு
பொன் புத்தகாலயா
7, தங்கையா தெரு, காந்தி நகர்,
நாகல்கேணி, சென்னை - 600 044.
தொ.எ. 044-47900507
komugi97@rediffmail.com
komugikalvi2012@gmail.com

இதழ் வடிவமைப்பு
வெங்கட்

MSSRF
LIBRARY

# பசுமைப் புரட்சியின் பிரம்மா டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன்




## ஓர் அஞ்சலி

தனி ஒருவனுக்கு உணவில்லை என்றால் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாடிய பாரதியின் வாக்கினை மெய்ப்பிக்கும் வகையில், இந்தியாவில் பசித்த வயிரே இருக்கக் கூடாது என்ற, உயரிய நோக்குடன் இந்திய வேளாண்மையில் மாபெரும் புரட்சியை உருவாக்கி, உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது மட்டுமல்ல, உலகுக்கும் உணவு ஏற்றுமதி செய்வோம் என்ற நிலையை உருவாக்கிய **புரட்சி பிரம்மா டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன்** அவர்களின் மறைவு உலக வேளாண்மைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவருக்கு உலக வேளாண் பெருமக்களின் சார்பான அஞ்சலியை செலுத்துகிறோம்.

டாக்டர் எம்.எஸ்.சாமிநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டிப் பெருமைப்படுத்தும் விதமாக அவரது பிறந்த நாளை வேளாண்மை தினம் என அறிவிக்க வேண்டுமென அரசுக்குக் கோரிக்கை வைக்கிறோம்.

ஆசிரியர்
**கி. முத்தையன்**



## குரு வணக்கம்

அரசுத் துறையில் பணியில் சேரும் ஒவ்வொரு பணியாளரும், அரசு திட்டங்களை நிறைவேற்றும் செயலில் ஈடுபடும்போது, அரசுக்கு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், பயனடையும் பயனாளிகளுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், அரசுப் பணியாளர்கள் மக்களோடு மக்களாக இணைந்து மக்களுக்காக எப்படிப் பணிபுரிய வேண்டும் என்ற அரிச்சுவடிப் பாடத்தை எனக்குக் கற்பித்த ஆசான் எனது குருநாதர்

**மேதகு முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன்** அவர்கள்

என் வாழ்க்கைப் பாதையை செப்பனிட்டுக் கொடுத்த நல்லாசான் அவர்களுக்கு எனது குரு வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

**கிருஷ்ணன் முத்தையன்**
வேளாண் இணை இயக்குனர்
பணி நிறைவு



# 'பசுமைப் புரட்சி நாயகன்'



சாமி போல வந்த எங்கள் சுவாமிநாதன்,
மக்கள் பசி தீர்த்து உயிர் காத்த சுவாமிநாதன்.
வேளாண்மை விஞ்ஞானி எங்கள் சுவாமிநாதன்,
விண்ணுலகப் புகழ் தொட்ட சுவாமிநாதன்.
ஐ.பி.எஸ். பதவியை உதறித் தள்ளி,
உணவு உற்பத்தியில் புரட்சி செய்த சுவாமிநாதன்.
கோதுமையும் நெல் மணியும் நம் உணவாதாரம்
அதன் தட்டுப்பாட்டை தகர்த்தெரிந்த சுவாமிநாதன்.
TNAU உலகுக்களித்த சுவாமிநாதன்
நார்மன் போர்லாகின் நல் நண்பன் சுவாமிநாதன்.
குட்டை ரகக் கோதுமையை அறிமுகம் செய்து
'தீவிர விவசாயம்' கற்றுத் தந்து
பஞ்சாபை இந்தியாவை கோதுமைக் களஞ்சியமாக்கி
வரவிருந்த பஞ்சத்தைத் துரத்திய வீரன்.
மகசூலை அள்ளித் தரும் நெல் வகைகள்
பல கொணர்ந்து பக்குவமாய் பயிர் செய்ய தமிழகத்தில்
சாகுபடி வழிமுறைகள் சொல்லித் தந்த
உற்பத்தி நாயகன் எங்கள் உழவனின் நண்பன் சுவாமிநாதன்.
கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு
அங்கு வாழும் பெண்களின் நல் வாழ்விற்கு
பாடுபட்ட மாமேதை சுவாமிநாதன்
சாதித்த சாதனைகள் மிகப் பிரம்மாண்டம்.
மான்கொம்பு சாம்பசிவம் சுவாமிநாதன்
எங்கள் M.S. Swaminathan அய்யாவேதான்
இந்தியா ஒரு வல்லரசாய்த் திகழ்வதற்கு இவர்
பெரும் காரணமென்றால் அது மிகையாகாது.
இவர் வாங்காத பட்டமில்லை விருதுகளில்லை .
எனினும் பண்போடு பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்தார்.
இவ்விந்திய விவசாயப் புரட்சி வேந்தன்
பத்ம விபூஷண விருது பெற்ற நம் வேளாண் தந்தை
இன்று நம்மிடையே உயிருடன் இல்லை எனினும்
அவர் தந்த வழிகாட்டுதல்கள் இந்திய நாட்டை
உணவு உற்பத்தியில் முன்னிலையில் நிறுத்தும்
என்று அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியும்.
அவரை இன்று பெருமையாக நினைவு கூரும்
அவர் அபிமானிகளில் ஒருவன்

**பி வி.வைத்தியலிங்கம்** I.R.A.S (Rtd),
*இந்திய ரயில்வே நிதி ஆணைய ஆலோசகர்*
*(அடிப்படையில் வேளாண் பட்டதாரி)*
*தொடர்பு: 9910487376*

## புகழ் அஞ்சலி



அஞ்ஞான இருளகன்று அனைவரும் போற்றிடவே
மெய்ஞானச் சுடரொளியாய் மேவுகின்ற ஓர் நாதர்
சாமிமலைக் குருநாதர்! - வேளாண்மை
விஞ்ஞானம் விளக்கமுற நம்மிடையே உலவிவந்த
ஓர்நாதர் - மாங்கோம்பு சுவாமிநாதன்
டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன்!

எடுப்பு

கும்பகோணம் ஈன்றெடுத்த குருமணியே! - உழவர்
குலம்வாழ வழிமுறைகள் தந்தமணியே! - (கும்ப)

தொகுப்பு

சாம்பசிவத் தம்பதியின் தவமணியே! - கோதுமை
சபர்மதி - சோனாரகம் தந்த மணியே! - (கும்ப)

முடிப்பு

மரபியல் துறையினுக்கோர் மாமணியே - அதன்
மாற்றத்தால் பெருகியதே நவமணியே!
உழவியல் துறையினுக்கோர் கருமணியே! - அகில
உலகமும் புகழ்கின்ற சிவமணியே! - (கும்ப)
உறுபசி நீங்கிட உழைத்தவரே!
உன்புகழ் ஓங்கிட வாழ்ந்தவரே!
உலகெலாம் உன்புகழ் நிலைத்திடுமே!
என்றும் நிலைத்திடுமே!
உன்பணி தொடர்ந்திட உழைத்திடுவோம்!
நாங்கள் உழைத்திடுவோம்!

**கணபதி. பழனி.** எம்.எஸ்.சி. (அக்ரி)
இணை வேளாண்மை இயக்குனர் (ப.நி)
கைபேசி 9944510461

இடம்: தஞ்சாவூர்
நாள்: 30.09.2023



# மான்கொம்பு சாம்பசிவன் சுவாமிநாதன்



எம்.எஸ்.சுவாமிநாதன் என அறியப்படும் மான்கொம்பு சாம்பசிவன் சுவாமிநாதன் (Mankombu Sambasivan Swaminathan, 7 ஆகஸ்ட் 1925 – 28 செப்டம்பர் 2023) இந்திய வேளாண் அறிவியலாளரும், தாவர மரபியலாளரும், நிர்வாகியும், மனிதாபிமானவாதியும் ஆவார். சுவாமிநாதன் பசுமைப் புரட்சியின் உலகளாவிய தலைவராக இருந்தார். கோதுமை மற்றும் அரிசியின் உயர் விளைச்சல் வகைகளை அறிமுகப்படுத்தி மேலும் மேம்படுத்துவதில் இவரது தலைமை மற்றும் பங்கிற்காக இந்தியாவில் இவர் பசுமைப் புரட்சியின் தந்தை என்று அறியப்பட்டவர். நார்மன் போர்லாக்குடன் சுவாமிநாதனின் கூட்டு அறிவியல் முயற்சிகள், விவசாயிகள் மற்றும் பிற அறிவியலாளர்களுடன் ஒரு வெகுஜன இயக்கத்தை முன்னெடுத்து, பொதுக் கொள்கைகளின் ஆதரவுடன், இந்தியாவையும் பாகிஸ்தானையும் 1960களில் பஞ்சம் போன்ற நிலைமைகளில் இருந்து காப்பாற்றியது இவரது சாதனைகளாகும்.

இவரின் பெயரில் அமைந்த சென்னையில் இயங்கும் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆய்வு நிறுவனம் என்னும் நிறுவனத்தின் அமைப்பாளரும் இவரே.

### வாழ்க்கையும், கல்வியும்

சுவாமிநாதன் 1925 ஆகஸ்ட் 7 அன்று தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கும்பகோணத்தில் பிறந்தார். இவர் கேரளாவின் ஆலப்புழா மாவட்டத்தைச் சேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணர் மா. கொ. சாம்பசிவன் மற்றும் பார்வதி தங்கம்மாள் ஆகியோரின் இரண்டாவது மகன் ஆவார். சுவாமிநாதனுக்கு 11 வயது இருக்கும்போது இவரது தந்தை

இறந்தார். இதன் பிறகு, சுவாமிநாதனை அவரது தந்தையின் சகோதரர் கவனித்துக் கொண்டார்.

சுவாமிநாதன் கும்பகோணத்தில் உள்ள நேட்டிவ் உயர்நிலைப் பள்ளி (தற்போது நேட்டிவ் மேல்நிலைப் பள்ளி) மற்றும் சிறுமலர் உயர்நிலைப் பள்ளிகளில் கல்வி பயின்றார். சிறு வயதிலிருந்தே, இவர் விவசாயம் மற்றும் விவசாயிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். இவரது குடும்பம் நெல், மாம்பழம் மற்றும் தென்னை பயிரிட்டது. பயிர்களின் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், வானிலை மற்றும் பூச்சிகள் பயிர்களுக்கும் வருமானத்திற்கும் ஏற்படுத்தக்கூடிய அழிவு உட்பட, இவரது குடும்பத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை இவர் நேரில் கண்டுணர்ந்தார்.

சுவாமிநாதன் மருத்துவம் படிக்க வேண்டும் என்று இவரது பெற்றோர் விரும்பினர். இதை மனதில் கொண்டு, இவர் விலங்கியல் பிரிவில் சேர்ந்து உயர் கல்வியைத் தொடங்கினார். ஆனால், 1943ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின் போது வங்காளப் பஞ்சம் மற்றும் துணைக் கண்டம் முழுவதும் அரிசிப் பற்றாக்குறையின் தாக்கங்களைக் கண்டபோது, இந்தியாவுக்குப் போதுமான உணவு கிடைப்பதை உறுதி செய்வதில் இவர் தனது வாழ்க்கையை அர்ப்பணிக்க முடிவு செய்தார். இவரது குடும்பப் பின்னணி, மருத்துவம் மற்றும் பொறியியல் ஆகியவை மிகவும் மதிப்புமிக்கதாகக் கருதப்பட்ட காலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், இவர் விவசாயத்தைத் தேர்ந்தெடுத்தார்.

சுவாமிநாதன் கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள மகாராஜா கல்லூரியில் விலங்கியல் துறையில் இளநிலைப்பட்டப்படிப்பை முடித்தார் (தற்போது கேரளா பல்கலைக்கழகத்தில் திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரி என்று அழைக்கப்படுகிறது). பின்னர் இவர் *1940* முதல் *1944* வரை சென்னைப் பல்கலைக்கழகத்தில் (மெட்ராஸ் வேளாண்மைக் கல்லூரி, தற்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்) படித்தார் மற்றும் வேளாண் அறிவியலில் இளநிலை அறிவியல் பட்டம் பெற்றார். இக்காலத்தில் வேளாண்மைப் பேராசிரியரான கோட்டா ராமசுவாமி அவர்களால் ஈர்க்கப்பட்டார்.

*1947*-ல் சுவாமிநாதன் மரபியல் மற்றும் தாவர இனப்பெருக்கம் குறித்து ஆய்வு செய்வதற்காக புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்திற்குச் சென்றார். இவர் *1949*-ல் உயிரணு மரபியலில் உயர் தனித்துவத்துடன் முதுநிலை பட்டம் பெற்றார். உருளைக்கிழங்கில் குறிப்பிட்ட கவனம் செலுத்திய இவரது ஆராய்ச்சி சொலானம் பேரினத்தில் கவனம் செலுத்தினார். சமூக அழுத்தங்களால் இவர் இந்திய குடிமைப்பணி தேர்வுகளில் கவனம் செலுத்தினார். இதன் மூலம் இவர் இந்திய காவல் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். இருப்பினும், இதே நேரத்தில், நெதர்லாந்தில் மரபியலில் ஆய்வு செய்ய யுனெஸ்கோ ஆய்வுநிதி உதவி கிடைத்ததால், விவசாயத் துறையில் இவரது கவனம் சென்றது.

#### மண வாழ்க்கை

சுவாமிநாதன் மீனாவை மணந்தார். இவர் கேம்பிரிட்ஜில் படிக்கும்



போது *1951*-ல் மீனாவைச் சந்தித்தார். திருமணத்திற்கு பின்னர் இந்த இணையர் தமிழ்நாட்டில் சென்னையில் வசித்து வந்தனர். இவர்களுக்கு மூன்று மகள்கள் உள்ளனர். மூத்த மகள் **சௌமியா சுவாமிநாதன்** ஓர் குழந்தை மருத்துவர் ஆவார். **மதுரா சுவாமிநாதன்** ஓர் பொருளாதார நிபுணர் ஆவார். இளைய மகள் **நித்யா சுவாமிநாதன்** பாலினம் மற்றும் கிராமப்புற மேம்பாடு குறித்து பணியாற்றுகின்றார்.

மகாத்மா காந்தி மற்றும் ரமண மகரிஷியால் ஈர்க்கப்பட்ட சுவாமிநாதன், தமது சொந்த நிலத்தின் பெரும் பகுதியினை வினோபாபாவின் சமூகச் செயல்பாட்டிற்காக வழங்கினார். 2011ல் சுவாமிநாதன் அளித்த பேட்டி ஒன்றில், தான் இளமையாக இருந்த போது, சுவாமி விவேகானந்தரைப் பின்பற்றியதாகக் கூறினார்.

#### பணிகள்

இவர் இந்தியாவின் பசுமைப் புரட்சியை முன்னின்று நடத்தியவர். இந்தியாவிலும் சர்வதேச அளவிலும் புகழ்பெற்ற ஆய்வு நிலையங்களில் பேராசிரியர், ஆராய்ச்சி நிர்வாகி, தலைவராக இருந்தவர். வேளாண்மைத் துறைச் செயலாளர், அரசின் திட்டக் குழுவின் உறுப்பினர், மற்றும் துணைத் தலைவர் பதவிகளை வகித்தவர்.

#### அறிவியல் வெளியீடுகள்

சுவாமிநாதன் 1950 மற்றும் 1980க்கு இடையில் 46 ஆய்வுக் கட்டுரைகளை தனியாக எழுதி வெளியிட்டுள்ளார். மொத்தத்தில் இவர் 254 கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவற்றில் 155 கட்டுரைகளில் முதன்மை ஆசிரியராக உள்ளார். இவரது அறிவியல் கட்டுரைகள் பயிர் முன்னேற்றம், உயிரணு மரபியல் (சைட்டோஜெனெடிக்ஸ்) மற்றும் மரபியல் மற்றும் இனத்தொகுதி வரலாறு (பைலோஜெனெடிக்ஸ்) ஆகிய துறைகளில் வெளிவந்துள்ளன. இந்திய மரபியல் ஆராய்ச்சி இதழ், நடப்பு அறிவியல் நேச்சர் மற்றும் கதிர்வீச்சு தாவரவியல் ஆகிய ஆய்விதழ்களில் இவர் அடிக்கடி ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

#### விருதுகள்

1. சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது *1961*
2. இந்தியாவிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள 38 பல்கலைக் கழகங்கள் இவருக்கு மதிப்புறு முனைவர் பட்டங்கள் வழங்கியுள்ளன.
3. தேசிய, சர்வதேச அளவில் *41* விருதுகளைப் பெற்றவர்.
4. பெருமைமிகு மகசேசே விருது
5. கிராமப்புற மக்களின் மேம்பாடு, வேளாண் ஆராய்ச்சிக்காக கொலம்பியா பல்கலைக்கழகத்தின் 'வால்வோ' விருது
6. எச். கே. பைரோதியா விருதுகள். 2005
7. லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருது 2006
8. தேசிய ஒருமைப்பாட்டுக்கான இந்திரா காந்தி விருது.

இப்படி தேசிய அளவில் பல உயரிய விருதுகளைப் பெற்ற பசுமைப்புரட்சி நாயகன் தான் எம்.எஸ்.சுவாமிநாதன். இவரது மறைவு உலக உழவர் பெருமக்களுக்கு ஈடுசெய்ய இயலாத இழப்பாகும்.